CC 462/2021

17.02.2026

பு.சா.1,

பெயர்: தாமரைச்செல்வன்

த/பெ. தங்கவேல்

பு.சா.1 சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது நிறுவனத்திற்கு எதிரி நிறுவனம் இயந்திரத்தை விநியோகம் செய்யவில்லையென்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல, இரண்டு இயந்திரத்தை கொடுத்தார்கள், அது சரிவர இயங்கவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் விநியோகம் செய்யவில்லையென கூறியிருந்தால் அதுதவறு என்றால் சரிதான்.

பு.சா.ஆ.6 ஆவணத்தில் எதிரி நிறுவனம் எனது நிறுவனத்திற்கு கொடுத்த 4 இயந்திரத்தையும் 20.03.2020 க்குள் சரிசெய்து தரவேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இயந்திரங்களை வங்கியில் கடன் பெற்றுதான் வாங்கினோம் என்றால் சரிதான்.

இயந்திரம் வாங்கும் நிறுவனத்திடமிருந்து பேரம் பேசிதான் வாங்குவோம் என்றால் சரிதான். பேரம் பேசி வாங்கிய விலை வித்தியாசத்திற்காகத்தான் எதிரி காசோலை கொடுத்ததாக கூறுகிறார் என்றால் சரியல்ல. புகார்தாரர் நிறுவனத்திடமிருந்து சம்பந்தமில்லாத நபரிடமிருந்து ஆவணத்தை பெற்று அதிகாரம் பெற்றதாக பொய்யாக கூறிக்கொண்டு, எந்தவித சட்டத்தகுதியும் இல்லாமல் நான் எதிரி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

மேற்படி நிறுவனத்திற்கு எதிரி ஆதரவாக கொடுத்த காசோலையை மேற்படி மேகராஜ் என்பவருடன் சேர்ந்து மோசடியாக பணம் பறிக்கும் நோக்கத்துடன் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மோசடியாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால்தான், புகார்தாரர் நிறுவனத்திலிருந்து கொடுதத திட்ட மதிப்பீடு, எதிரி நிறுவனம் கொடுத்ததாக சொல்லப்படும் விலைப்பட்டியல், எனது நிறுவனத்தின் வங்கி கடன் கணக்கு விவரங்கள் ஆகியவற்றை நான் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல.

என்னுடைய உரிமையாளர் எனக்கோ, மேகராஜுகோ அங்கீகார கடிதம் எதுவும் அளிக்கவில்லையென்றால் சரியல்ல. அவ்வாறு எனக்கு கொடுத்திருந்தால் நான் வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. ஆவணங்கள் ஒன்றுக்கொன்று முரணாக

உள்ளது என்றால் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் என்னால் மோசடியாக தயாரிக்கப்பட்டுள்ளதால்தான் குறுக்கு விசாரணையில் எனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் எதிரி எனக்கு எந்தவிதமான தொகையும் சட்டப்படி செலுத்த தேவையில்லையென்றாலும், எதிரியின் மீது வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், எதிரிக்கும் வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமுமில்லையென்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.